**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள் :10.04.2026**

**வழக்கு எண் : OS.79/2023**

**சாட்சி பெயர் : திரு.செல்வகுமார் /PW.1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கும், எதிர்மனுதாரருக்கும் பெரியவர்களின் ஏற்பாட்டின்பேரில் திருமணம் ஆனது என்றால் சரிதான். 12.11.2020ம் தேதி ஆழ்வார்திருநகரி அருள்மிகு ஏகானந்தசுவாமி கோவிலில் வைத்து திருமணம் நடந்தது என்றால் சரிதான். அதன்பிறகு எங்கள் வீட்டார்ஏற்பாட்டின்பேரில் ஐஸ்வர்யா திருமண மகாலில் திருமண வரவேற்பு நடந்தது என்றால் சரிதான். அதன்பிறகு எதிர்மனுதாரர் வீட்டார் சார்பில் தூத்துக்குடியில் வைத்து திருமண வரவேற்பு நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின்போது எதிர்மனுதாரர் எம்.எஸ்.சி பி.எட் படித்திருந்தார் என்றால் சரிதான். நான் பி.எஸ்.சி., எம்.பி.எல் படித்திருந்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு சட்டக்கல்லூரியில் சேர்ந்து சட்டம் படித்தேன் என்றால் சரிதான். நான் பார்கவுன்சிலில் பதிவு செய்யவில்லை. நான் பி.எஸ்.சி., எம்.பி.எல் படிப்பிற்கான வேலையைதான் பார்த்து வருகிறேன். திருமணத்திற்கு பிறகு திருநெல்வேலி சட்டக்கல்லூரியில் படித்தேன். தினசரி கல்லூரிக்கு செல்வேன் என்றால் சரியல்ல, கொரானோ வைரஸ் பரவிய காரத்தினால் வீட்டில் இருந்தேன். எனது திருமணத்தின்போது நான் டீச்சராக வேலை பார்த்தேன். கொரானா பரவல் காரணமாக அப்பொழுது வீட்டில் இருந்து வகுப்பு எடுத்து கொண்டிருந்தேன். கொரானா பரவல் காரணமாக அப்பொழுது வீட்டில் இருந்து வகுப்பு எடுத்து கொண்டிருந்தேன் என்று மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது திருமணத்தின்போது எதிர்மனுதாரருக்கு அவரது பெற்றோர் 13 சவரன் நகை போட்டார்கள் என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. எனது முதல்விசாரணையிலும், எதிர்மனுதாரருக்கு 13 பவுன் நகையும், 1 1/2 பவுன் கைசெயினும், அரை பவுன் மோதிரமும் போட்டார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்தின்போது எங்கள் தரப்பில் எதிர்மனுதாரருக்கு தங்கத்தில் தாலி போட்டோமா என்றால் தாலி குண்டு மற்றும் திருமாங்கலயம் அணிவித்தோம் அது எத்தனை பவுன் என்று தெரியாது.. தாலி குண்டு மற்றும் திருமாங்கலயம் அணிவித்தோம் என்று மனுவிலும், முதல்விசாரணையிலும்

சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், எதிர்மனுதாரரும் திருநெல்வேலியில் தனி வீடு எடுத்து தங்கியிருந்தோம் என்றால் சரிதான். திருநெல்வேலி குடியிருந்தவீடானது வாடகை வீடாகும். திருமணத்தின்போது எதிர்மனுதாரர் வீட்டில் ரூ.50,000/– ரொக்கம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்குபிறகு நானும், எதிர்மனுதாரரும் ஒரு சில மாதங்கள் சந்தோசமாக குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டு சார்பில் தனிகுடுத்தனம் நடத்துவதற்கு தேவையான வீட்டு உபயோக பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2026.04.10 15:51:56 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**